# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 25–ஆம் நாள், சனிக்கிழமை

**I.A. No. 11 of 2025 in I.A.No.281 of 2018**
**in**
**O.S. No. 165 of 2008**
**(CNR No. TNSA13-000103-2008)**

Dr. D. பொன்னுசாமி .. மனுதாரர் / மனுதாரர் / வாதி

எதிராக

1. பட்டுக்கண்ணு (எ) கிருஷ்ணமூர்த்தி (இறந்தவர்)
2. முனியப்பன்
3. அன்னக்கிளி
4. பச்சமுத்து
5. ஆட்டுக்கார கண்ணன்
6. சின்னசாமி
7. ராமசாமி
8. செல்லம்மாள்
9. கமலவேணி
10. பேபிராணி .. எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 17.10.2025 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. முருகேசன் அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்ட நிலையில், 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சேவியர் அவர்களும் ஆஜராகியும், 2, 4 முதல் 7, 10 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>உத்தரவுரை</u>

அசல் வழக்கில் இ.ம.வ.எண்.281/2018 மனுவை மனுதாரரின் ஆட்சேபனையை தாக்கல் செய்வதற்கு முன்பே கடந்த 03.04.2025 அன்று முடித்துவைக்கப்பட்டதை இரத்து செய்து, 136 நாட்கள் காலதாமதமாக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ள அனுமதி வேண்டி மனுதாரர் / மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. <u>மனுதாரர் / மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>

மனுதாரர் / வாதி, இ.ம.வ.எண்.281/2018–ல் மனுதாரரும், தாவாவில் வாதியும் ஆவார் என்றும், மனுதாரர் இம்மனுவை மேற்படி இ.ம.வ.எண்.281/2018–ல் தனது தரப்பு ஆட்சேபனையை தெரிவிப்பதற்கு முன்பே முடித்து வைக்கப்பட்டுள்ளதால் மேற்படி மனுவை மறுதிறவு செய்து தனது தரப்பு ஆட்சேபனையை சமர்ப்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி

***.. 3 ...***

இ.ம.வ.எண்.281/2018 என்ற மனுவை தனது தாவா சொத்தின் கிழக்குபுற எல்லையையும், மேற்குபுற எல்லையையும், வடபுற எல்லையையும் அளந்து அத்து காட்டவேண்டி சமர்ப்பித்துள்ளதாகவும், ஆனால் நீதிமன்றம் மூலம் ஆணையருக்கு வழங்கப்பட்ட Supplementary Warrant–ல் தாவா சொத்தின் கிழக்குபுற எல்லை மற்றும் வடக்குபுற எல்லை ஆகியவற்றை மட்டுமே அளந்து அத்து காண்பிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி தாவா சொத்தை அளவீடு செய்த நில அளவையாளர், தாவா சொத்து அளந்து அத்து காண்பிக்கப்பட்டது என்றும், தாவா சொத்தில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லையென்றும் பொத்தாம் பொதுவாக ஒரு FMB வரைபட அறிக்கையை சமர்ப்பித்துள்ளார் என்றும், ஆனால் தாவா சொத்தின் மேற்குபுற எல்லையில் ஆக்கிரமிப்பு உள்ளது என்றும், அதேபோல் தாவா சொத்தை பார்வையிட வந்த நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தில் பார்வையிட்ட எந்த ஒரு அடையாளங்களையும் அவரது அறிக்கையில் குறிப்பிடாமல் விட்டுள்ளார் என்றும், அதனால் தாவா சொத்து அளவீடானது முழுமையாக நடைபெற்றிருந்தாலும் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை நில அளவையரும், நீதிமன்ற ஆணையரும் அவர்களது அறிக்கையில் சரியாக தெரிவிக்க தவறிவிட்டனர் என்றும், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு மனுதாரர் வெளியூருக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றுவிட்டதால் தனது வழக்கறிஞரை சந்தித்து ஆட்சேபனையை தெரிவிக்க இயலாமல் போய்விட்டதாகவும், அதன் காரணமாக மேற்படி இ.ம.வ.எண்.281/2018 மனுவானது மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின்றி நீதிமன்றத்தால் கடந்த 03.04.2025 அன்று முடித்துவைக்கப்பட்டுவிட்டது என்றும், தனது தரப்பு ஆட்சேபனையை இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

.. 4 ...

3. **<u>9–ம் எதிர்மனுதாரர் / எதிர்மனுதாரர் / பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3, 8 எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் :</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை இந்த எதிர்மனுதாரர்கள் மறுத்துள்ளனர். மேலும், மனுதாரர் அசல் வழக்கை கடந்த 2008–ம் ஆண்டு எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்குச்சொத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்யாததால் மனுதாரர் / வாதி தாவா சொத்தை அளக்கவேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனுவின்பேரில் தாவா சொத்தை அளந்து அத்துக்கல் நட்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி உத்தரவின் அடிப்படையில் நீதிமன்ற ஆணையரும், சர்வேயரும் தாவா சொத்து முழுவதையும் மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அந்த சமயத்தில் ஆட்சேபனை எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யாமல் தற்பொழுது வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டி காலதாமதமாக மனுதாரர் ஆட்சேபனையை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆட்சேபனையானது அடிப்படை ஆதாரமற்றது என்றும், வழக்குச்சொத்தின் கிழபுறத்திலோ அல்லது மேற்குபுறத்திலோ எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை என்றும், அவ்வாறு இருந்திருந்தால் நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பார் என்றும், நீதிமன்ற ஆணையர் தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் தாவா சொத்து முழுவதையும் பார்வையிட்டதில் எவ்வித அத்துக்கற்களும் இல்லாததால் தாவா சொத்தை அளக்க இயலாது என குறிப்பாணை தாக்கல் செய்தார் என்றும், அசல் வழக்கு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு இந்த பிரதிவாதி தரப்பில் சாட்சிய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்ததாகவும், அதன் பின்னிட்டு வழக்கு

.. 5 ...

குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் / வாதி வேண்டுமென்றே வழக்கை காலம் தாழ்த்தவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

4. இம்மனுவில் 1–ம் எதிர்மனுதாரர் காலமாகிவிட்டார். 2, 4 முதல் 7, 10 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டுள்ளனர்.

5. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

***மனுதாரர் / மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?***

6. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர் / மனுதாரர் / வாதி தன்னுடைய மனுவில், இ.ம.வ.எண்.281/2018 என்ற மனுவை தனது தாவா சொத்தின் கிழக்குபுற எல்லையையும், மேற்குபுற எல்லையையும், வடபுற எல்லையையும் அளந்து அத்து காட்டவேண்டி சமர்ப்பித்துள்ளதாகவும், ஆனால் நீதிமன்றம் மூலம் ஆணையருக்கு வழங்கப்பட்ட Supplementary Warrant–ல் தாவா சொத்தின் கிழக்குபுற எல்லை மற்றும் வடக்குபுற எல்லை ஆகியவற்றை மட்டுமே அளந்து அத்து காண்பிக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்து

**.. 6 ...**

அளவீடானது முழுமையாக நடைபெற்றிருந்தாலும் தாவா சொத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை நில அளவையரும், நீதிமன்ற ஆணையரும் அவர்களது அறிக்கையில் சரியாக தெரிவிக்க தவறிவிட்டனர் என்றும், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு மனுதாரர் வெளியூருக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றுவிட்டதால் தனது தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்க இயலாமல் போய்விட்டதாகவும், அதன் காரணமாக மேற்படி இ.ம.வ.எண்.281/2018 மனுவானது மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின்றி நீதிமன்றத்தால் கடந்த 03.04.2025 அன்று முடித்துவைக்கப்பட்டுவிட்டது என்றும் கூறியுள்ளார். மாறாக 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் தங்களுடைய எதிருரையில், வழக்குச்சொத்தில் எல்லைகள் நிர்ணயம் செய்யாததால் மனுதாரர் / வாதி தாவா சொத்தை அளக்கவேண்டி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாகவும், நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, நீதிமன்ற ஆணையரும், சர்வேயரும் தாவா சொத்து முழுவதையும் மனுதாரர் மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் அளந்து நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்ததாகவும், அந்த சமயத்தில் ஆட்சேபனை எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யாமல் தற்பொழுது வேண்டுமென்றே வழக்கை இழுத்தடிக்க வேண்டி காலதாமதமாக மனுதாரர் ஆட்சேபனையை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலினை செய்கையில், அசல் வழக்காகனது எல்லைகளை வரையறுக்கவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் / வாதி தாவா சொத்தை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி கடந்த 16.02.2018 அன்று இ.ம.வ.எண்.281/2018 மனுவை தாக்கல் செய்துள்ளார்.

.. 7 ...

மேற்படி மனுவில் நீதிமன்றம் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு அவர் மூலம் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தன்னுடைய மனுவில், நீதிமன்ற ஆணையர் அவரது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பின்பு தான் வெளியூருக்கு மருத்துவ சிகிச்சைக்காக சென்றுவிட்டதால் தனது தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்க இயலாமல் போய்விட்டதாகவும், அதன் காரணமாக மேற்படி இ.ம.வ.எண்.281/2018 மனுவானது மனுதாரர் தரப்பு ஆட்சேபனையின்றி நீதிமன்றத்தால் கடந்த 03.04.2025 அன்று முடித்துவைக்கப்பட்டுவிட்டதாகவும் கூறியுள்ளார். மேற்கண்ட பரிசீலனையில், மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபனையை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது.

8. இறுதியாக, மனுதாரர் / மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், 25–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.10.25 18:32:39 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

*.. 8 ...*

<u>மனுதாரர் / மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u> இல்லை

<u>மனுதாரர் / மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் / எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u> இல்லை

<u>நீதிமன்ற சாட்சிகள் </u>: இல்லை

<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> : இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2025.10.25 18:32:48 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., ஆத்தூர்.**

**இ.ம.வ. எண். 11/2025**

**----------------**

**அ.வ. எண். 165/2008**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 25.10.2025

இ.ம.வ. எண். 11/2025 **in** அ.வ.எண்.165/2008